<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.</u>

<u>**MCOP.No. 85/2024**</u>

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18-ம் நாள் புதன்கிழமை **ம.சா.2**-ன் வாக்குமூலம் (1969-ம் ஆண்டு 54-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளர் திரு. ஆர். கண்ணதாசன் என்பவரால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | சங்கர் | **வட்டம்** | |
| **த.பெ** | | **சமயம்** | |
| **கிராமம்** | | **வயது** | |

<u>**முதல் விசாரணை:**</u>

நான் நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள விபரங்களை நான் தான் வழக்கறிஞரிடம் தெரிவித்தேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னுடைய ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்தை நான் நேரில் பார்த்தேன்.விபத்திற்கு காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் நான் மருத்துமைனையில் சேர்த்தேன் என்றும் அதன் பிறகு போலீசார் என்னை விசாரித்தார்கள் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் சேர்த்திருந்தால் விபத்து பதிவேட்டில் நான் சேர்த்தாக இருக்கும் என்றால் சரியதான். நான் சேர்த்ததாக தான் இருக்கிறது. போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம்

P PARTHASARATHY

Digitally signed by P PARTHASARATHY
Date: 2026.02.18 18:17:04 +0530

வாங்கினார்கள் என்றால் சரிதான்.நான் டிராவல்ஸ் வைத்திருக்கிறேன். விபத்தின் போது நான் எங்கு இருந்தேன் என்றால் நாட்டரசன் கோட்டையிலிருந்து தண்ணீர் பந்தலுக்கு பெட்ரோல் போட வந்தேன். நான் பெட்ரோல் போட வந்த இடத்திற்கும் விபத்து நடந்த இடத்துக்கும் எவ்வளவு துாரம் என்றால் 50 அடி. நான் விபத்து நடந்த பிறகு பார்த்தேன் என்றால் விபத்து நடந்த போது பார்த்தேன். விபத்தில் இறந்து போனவரை எனக்கு ஏற்கனவே தெரியும் என்றால் சரிதான் பழக்கமானவர். விபத்தில் இறந்து போனவர் எனக்கு வழக்கமானவர் என்பதால் பொய்யாக சாட்சி சொல்ல வந்ததேன் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்து போனவருக்கு குடி பழக்கம் இருந்ததா என்றால் இல்லை. விபத்தில் இறந்து போனவர் விபத்தின் போது மது போதையில் இருந்தார் என்றும் பேருந்து வருவதை தெரியாமல் ரோட்டை கடந்து விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. விபத்து இறந்து போனவரின் கவனக்குறைவாவல் நடந்தது என்றும் அதனால் எதிர்மனுதாரார் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல.

1,2 எதிர்மனுதாரரின் குறுக்கு விசாரணை வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

P PARTHASARATHY

Digitally signed by P PARTHASARATHY
Date: 2026.02.18 18:17:12 +0530